DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.238/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திருமதி. சுகந்தி | கிராமம் : | |
| கணவர் பெயர் : | சிவக்குமார் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சி பொருளதார குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 27.08.2021ம் தேதி லாலாப்பேட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது உதவி ஆய்வாளர் திரு. மாரிமுத்து அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்த போது கொம்பாடிப்பட்டி குடித்தெருவைசேர்ந்த செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்தபுகாரை பெற்று லாலாப்பேட்டை குற்ற எண். 362/2021 ச/பி 279, 304(ஏ) இதச படி வழக்கு பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. இவ்வழக்கை நான் விசாரிக்க எடுத்துக்கொண்டு 27 .08.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்ப இடத்தை சாட்சிகள் இளங்கோவன், கணேசன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு குளித்தலை அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த இறந்துபோன சதிஷ்குமார் என்பவர் பிரேதத்தின் மீது பிரே விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3 பின்பு சம்பவயிடச்சாட்சிகள் செல்வராஜ், பாலாஜி, சஞ்சீவிராமன் , அருண்குமார், அனந்தகிருஷ்ணன், ரெங்கராஜன் லோகேஸ்வரன், இளங்கோவன், கணேசன் ஆகியோரைதனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறப்பின் உண்மையான காரணம் அறியும் போது இறந்தவரின் பிரேதத்தை காவல்ர் 752 திரு.நரேஷ்குமார் என்பவர் மூலமாக பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் 13.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி கண்ணன் என்பவரை காரணம் கூறி கைது செய்து தக்க ஜாமீனில்விடுவித்தேன்.

4. அன்றைய தினமே எதிரி ஓட்டி வந்த TN 47 AZ 9956 என்றலாரியை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வுககு அனுப்பி வைத்தேன். 13.09.2021ம் தேதி இறந்து போன சதிஷ்குமார் ஓட்டி வந்த TN 47 AS 0172 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். 10.11.2021ம் தேதி இறந்து போன சதிஷ்குமார் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த குளித்தலை அரசு மருத்துவமனை மருத்துவர் பூமிநாதன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன்.

5. 02.12.2021ம் தேதி எதிரி மற்றும் இறந்து போனவர் ஓட்டி வந்த வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. மீனாட்சி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றேன். **TN 47 AZ 9956 என்ற லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) TN 47 AS 0172 என்ற இருசக்கரவாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**6.** பின்பு பிரேதத்தை பரிசோதனைக்கு உட்படுத்தி முதல்நிலைக்காவலர் 752 திரு.நரேஷ்குமார் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.மாரிமுத்து ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் என் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 02.12.2021 இதச பிரிவுகள் 279, 304(A) ன் படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. பட்டியல் சாட்சி 1 யார்மூலமாக சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் யார் மூலமாக கேள்விப்பட்டதாக நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பட்டியல் சாட்சி 1 சம்பவம் பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று சம்பவம் பற்றி விசாரித்து அதன் பிறகு தான் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக புகார் கொடுத்தார்என்றால் சரிதான். புகாரில் நேரில் பார்த்த சாட்சிகள் யாரையும் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. பட்டியல் சாட்சி 1 செல்வராஜ் என்பவரின் மகன் தான் இறந்து போன செல்வராஜ் என்றால்சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் கம்பி, சிமெண்ட் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு வந்தார்களா என்றால் ஞாபகமில்லை. எதிரியின் வாகனம் விதிமுறைகளை பின்பற்றி சரியாக சென்று கொண்டிருந்தது பின்னாடி இறந்துபோனவரின் வாகனமும் ஒரே திசையில் சென்றது என்றால் சரிதான். எதிரியின் வாகனம் திடிரென்று வேகம் குறைத்ததால் விபத்து ஏற்பட்டது. எதிரியின் வாகனம் வேகம் குறைக்கப்பட்டது என்றால் திடிரென்று குறைக்ககப்பட்டது.

3. முன்னால் வாகனம் வந்தால் குறுக்கே எதாவது வந்தால் வாகன ஓட்டிகள் வேகத்தை குறைப்பது இயல்பு தான் என்றால் சரிதான். முன்னால் எதாவது குறுக்கே வந்து வேகத்தை குறைத்தால் ஆஜாக்கிரதையில் வராது என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்திற்கு எதாவது குறுக்கே வந்தால் வேகத்தை குறைக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். பொதுவாக ஒவ்வொரு வாகனத்திற்கும் 10 மீ இடைவெளி விட்டுதான் செல்லவேண்டும் என்றால் சரிதான்.

4. இறந்துபோன நபர் 10 மீ இடைவெளியை கடைப்பிடித்திருந்தால் எதிரியின் வாகனம் வேகத்தை குறைத்திருந்தாலும் விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல. எதிரியின் வாகனத்தை திடிரென்று நிறுத்தியிருந்தால தான் எதிரியின் அஜாக்கிரதையில் கவனக்குறைவில் வரும் வேகத்தை குறைப்பது கவனக்குறைவில் வராது என்றால் சரியல்ல. எதிரி சரியான விதிமுறைக்கு உட்பட்டு சரியான வேகத்தில் வாகனததை ஓட்டி சென்றால் என்றாலும் இறந்து போன நபர் தான் வாகனத்தின் பின்னால் ஆஜாக்கிரதையாகவும்,

அதிவேகமாகவும், வாகனத்தை ஓட்டி வந்து லாரியின் பின்னால் மோதி விபத்தை அவரே ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

5. சம்பவ இடத்தில் அருகில் உள்ள சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இறந்து போன நபர் மீது வழக்கு பதிவு செய்தால் விபத்து நஷ்டஈடு பெறமுடியாது என்பதற்காக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறுதி அறிக்கையில் குறிப்பிட்டது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை எனறால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.19 11:04:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.